www.tamilarangam.net

# "தோழர்" பிரபாகரனுக்கு ஒரு பகிரங்கக் கடிதம்

## தமிழ் ஈழ விடுதலை இயக்கம்

தமிழ் தேசிய ஆவணச்சுவடிகள்

www.tamilarangam.net

தோழரே!

தமிழ்பேசும் மக்களின் எதிர்காலம் மிகவும் இக்கட்டான ஒரு காலகட்டத்தை எதிர்நோக்கியுள்ள இவ்வேளையில் ஆயிரக்கணக்கில் பொதுமக்கள், போராளிகள் கொல்லப்பட்டும், லட்சக்கணக்கில் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் அகதிகளாகியுள்ள இந்நிலையில் தமது போராட்டத்தின் நிலமைபற்றியும், அதன் எதிர்காலம் பற்றியும் சிந்திக்க வேண்டிய சூழ்நிலைக்கு ஒவ்வொரு தமிழ்மகனும் தள்ளப்பட்டுள்ளான் என்பதை உணர்வீர்கள் என நம்புகிறோம்.

எதிரியால் ஏற்படுத்தப்பட்ட சீரழிவுகளிலிருந்து தன்னைக்காப்பாற்றிக் கொள்ள முடியாமல் மக்கள் தத்தளிக்கும் இவ்வேளையில் தங்கள் தலைமையிலான இயக்கம் சமீபத்தில் 300 இற்கு மேற்பட்ட போராளிகளையும், பொதுமக்களையும் விடுதலையின் பேரால் படுகொலைசெய்திருப்பது போராட்டம் பற்றி மேலும் ஒருபடி சிந்திப்பதற்கு ஒவ்வொருவரையும் தள்ளியுள்ளது.

இப்படுகொலைகளைத் தொடர்ந்து தங்கள் இயக்கம் இப்படுகொலைகளை நியாயப்படுத்த அடிக்கடி வெளியிட்டுவரும் காரணங்கள் இப்படுகொலைக்கான காரணங்களை மட்டுமல்லாது தமிழ்மக்களின் எதிர்காலம் பற்றிய தங்கள் இயக்கத்தின் நோக்கங்கள், செயற்பாடுபற்றியும் பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஆயிரக்கணக்கான இளைஞர்கள் தமிழ்பேசும் மக்களின் ஜனநாயக உரிமைகளை வென்றெடுக்க தங்களின் பின்னால் அணிதிரண்டுள்ள இவ்வேளையில் போராட்டம் குறித்தும், அப்போராளிகளின் எதிர்காலம் குறித்தும் அக்கறையுள்ள நாம் இவற்றை தங்களுக்கும் பொதுமக்களுக்கும் சுட்டிக்காட்டுவது அவசியமும் அவசரமும் என எண்ணுகிறோம்.

படுகொலைகள் குறித்து தங்கள் இயக்கம் ஆரம்பத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில் ஆட்கடத்தல் சம்பவம் குறித்தும், தங்கள் போராளி ஒருவர் கொல்லப்பட்டதாகவும் கூறி அதன் காரணமாகவே படுகொலைகளை மேற்கொண்டதாக குறிப்பிட்டுள்ளீர்கள்.

இக்காரணம் உண்மையாயின் இவ்வாறான ஆட்கடத்தல்கள் முன்னர் இடம்பெற்ற வேளைகளில் எவ்வாறு இதனைத் தீர்த்தீர்கள்? எதிர்காலத்திலும் இதுதான் செயற்பாடா? பிரஜைகள் குழு முன்னிலையில் அவ்வப்போது பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்ளவேண்டுமெனவும், ஈழத்தேசிய விடுதலை முன்னணியில் இவை பற்றி பேசித் தீர்த்துக்கொள்ளலாம் என ஒருநிலமை இருந்தபோதும் இச்சந்தர்ப்பங்களை புறத்தொதுக்கி ஒரேசமயத்தில் 300பேரை படுகொலை செய்துள்ளது விடுதலைப் போராட்டத்திற்குரிய ஆரோக்கியமான நடவடிக்கை என கருதுகிறீர்களா?

இதன் பின்னர் திருட்டுச் சம்பவங்கள் குறித்தும், அதுதொடர்பான பட்டியலொன்றை வெளியிட்டும் குற்றம் சுமத்தி இவை சமூகவிரோத செயல்களாகையால் இப்படுகொலைகளை மேற்கொண்டதாகவும் கூறி இரண்டாம் முறையாக புதிய குற்றச்சாட்டினை சுமத்தியுள்ளீர்கள்.

இப்படுகொலைக்கான காரணம் இதுவாக இருந்தால் கடந்த ஒருவருடங்களுக்கு மேலாக வடபகுதி முழுவதும் உங்கள் கட்டுப்பாட்டில் இருப்பதாகவும் மற்றையவர்கள் தங்கள் முகாம்களிலே சுகபோகம் நடத்திக்கொண்டிருப்தாகவும் அடிக்கடி செய்தி வெளியிட்டு வந்துள்ளீர்கள். தங்கள் அறிக்கைகள் உண்மையாயின் தங்கள் ஸ்தாபனத்தின் கட்டுப்பாட்டிற்குள் உள்ள பகுதிக்குள் திருட்டுச்சம்பவங்கள், கொள்ளைகள், வழிப்பறிகள், ஆட்கடத்தல்கள் தாராளமாக இடம்பெற்று வந்தன. இவை தங்கள் ஸ்தாபனத்திற்குத் தெரியாமல் எவ்வாறு நடந்தேறின? திருடப்பட்ட பொருட்கள் முகாம்களிலிருந்து எடுக்கப்பட்டு பொதுமக்கள் பார்வையில் வைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளீர்கள். ஆனால் தாங்கள் இம் முகாம்கள் மீது தாக்கிய போது போராளிகளின் உடல்கள் சிதறியும், கட்டிடங்கள் தரைமட்டமாகியும் உள்ளன. ஆனால் அம்முகாம்களுக்குள் இருந்த பொருட்கள் மட்டும் எவ்வித சேதமுமில்லாமல் எடுக்கப்பட்டுள்ளன. இது எப்படி முடிந்தது? ஆச்சரியமாக இல்லையா?

இக்காரணம் கூட தங்கள் நடவடிக்கை குறித்து மேலும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

மூன்றும் முறையாக இன்னொரு புதிய காரணமொன்றை பத்திரிகைகளில் வெளியிட்டுள்ளீர்கள். இக்காரணங்கள் குறித்து பொதுமக்கள் குழப்பமடைந்துள்ளதோடு இப்போராட்டம் வெற்றியடையுமா? என்ற சந்தேகத்தையும் கிளப்பியுள்ளது.

அதாவது 'ரெலோ' இயக்கம் இந்திய சார்பு இயக்கமெனவும், படுகொலைச்சம்பவத்தின்போது எடுக்கப்பட்ட ஆயுதங்கள் இந்திய தயாரிப்பு எனவும் கூறி இந்திய ஊடுருவல் பங்களாதேஸ் நிலமையை உருவாக்கும் எனவும் குறிப்பிட்டுள்ளீர்கள்.

இக்காரணம் உண்மையாயின் இப் பிரச்சனையில் தங்கள் நிலைப்பாடு குறித்து தெளிவுபடுத்த வேண்டிய அவசியம் தங்களுக்கு உண்டு என எண்ணவில்லையா? ஏனெனில் லட்சக்கணக்கான மக்கள் அகதிகளாக இந்திய மண்ணில் இருக்கும் போது எமது பிரச்சனை குறித்து இந்திய அரசு சிறீலங்கா அரசுடன் பேச்சுவார்த்தை

தொடர்—

www.tamilarangam.net

நடத்திக்கொண்டிருக்கும் இத்தருணத்தில் ஒவ்வொரு இயக்கமும் இப்பிரச்சனை பற்றி தனித்தனி அபிப்பிராயம் வைத்திருக்கமுடியாது. உண்மையில் இப்பிரச்சனை குறித்து தங்கள் இயக்கம் சந்தேகம் கொண்டிருக்குமாயின் இதனை இதர இயக்கங்களோடு நீங்கள் ஏன் பகிர்ந்துகொள்ளவில்லை? இவ்வாறு செய்யாமல் படுகொலைகளைச் செய்தது பொருத்தமான நடவடிக்கை என கருதுகிறீர்களா? இந்திய துணைக்கண்டத்தின் பாதுகாப்புக் குறித்தும், போராட்டம் நீடிக்குமாயின் அங்குள்ள அகதிகள் நிலைமை பற்றியும் உங்கள் திட்டமென்ன?

எனவே இக்காரணம் கூட இப்படுகொலைக்கான காரணமென நாம் கருதவில்லை.

தொடர்ந்து இன்னொரு செய்தியும் தங்களால் வெளியிடப்பட்டுள்ளது. அதாவது இனிமேல் பிரிவினை நடவடிக்கையில் எந்த இயக்கமும் இறங்கக்கூடாது எனவும், சகல இயக்கங்களும் தங்கள் அணியில் இணைந்து கொள்ளவேண்டும் எனவும் வெளியிட்டுள்ளீர்கள்.

இச்செய்தி இப்போராட்டம் குறித்து பல்வேறு சந்தேகங்களை மக்கள் மத்தியிலும், இதர இயக்கங்கள் மத்தியிலும் எழுப்பியுள்ளது.

தங்களின் போராட்ட அணுகுமுறை தவறாயின் தட்டிக்கேட்க முடியாதா? கொள்கைகள் பிழையாயின் மறுதலிக்கமுடியாதா? தாங்கள் காட்டும் பாதை மிகவும் சரியானது என்பதை எவ்வாறு பரிசீலனைசெய்வது?

பேச்சுவார்த்தை குறித்து இந்திய அரசாங்கம் முயற்சிகள் மேற்கொண்டபோது அதற்கு சம்மதமளித்தல்லவா திம்புவில் கலந்துகொண்டீர்கள்? திம்புவில் செயற்படும் விதம் குறித்தும், அதன் பலாபலன்கள் குறித்தும் ஒரேவிதமாகச் செயற்பட்டீர்களல்லவா? தமிழ்பேசும் மக்களின் பிரச்சனை குறித்தும், அதன் தீர்வுகள் குறித்தும் வெவ்வேறு அபிப்பிராயம் இருப்பினும் ஒருமித்து செயற்படுவது என ஏற்றுக்கொண்டு ஈழத்தேசிய விடுதலை முன்னணியில் இணைந்து கொண்டீர்களல்லவா? பின்னர் ஏன் ஈழத்தேசிய விடுதலை முன்னணியில் இல்லை என அறிக்கைவிட்டீர்கள்? ஒற்றுமையில் நம்பிக்கையில்லையா? அவ்வாறாயின் ஒற்றுமை குறித்து நீங்கள் செய்ததென்ன? மக்கள் பல்வேறு இயக்கங்களை ஆதரித்து வருவதை நன்கு தெரிந்தே இணைந்து செயற்பட இணங்கினீர்கள். திடீரென இயக்கங்களையும், தலைவர்களையும் அழிக்க முயற்சிக்கிறீர்கள். உண்மையில் உங்கள் நோக்கத் தான் என்ன?

திம்புவில் ஒற்றுமையை கருத்து வித்தியாசங்களுக்கு மத்தியிலும் ஏற்று இயங்கிய பின் இன்று கருத்துவித்தியாசமுள்ள இயக்கத்தை துப்பாக்கி மூலம் பணிய வைப்பது, இணைய வைப்பது, தங்களின் ஒற்றுமை பற்றிய உள்ளார்ந்த நோக்கங்களில் பலத்த சந்தேகத்தையும், எதிர்காலத்தில் சேர்ந்து செயற்படும் நிலைமைகளையும் பலத்த கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

தேசிய விடுதலைப் போராட்டம் என வர்ணித்து இப்போராட்டத்தினை எடுத்துச் செல்லும் தங்கள் இயக்கம் 35 லட்சத்திற்கு மேற்பட்ட தமிழ்பேசும் மக்களை அவர்களின் ஜனநாயக உரிமைகளை மறுதலித்து, இயக்கம் அமைக்கவும், செயற்படவும், பிழைகளை சுட்டிக்காட்டவும் உள்ள உரிமைகளை துப்பாக்கி மூலம் பறிக்க எண்ணும் நீங்கள் எவ்வாறு தேசிய சுதந்திரத்தினை வழங்கப்போகிறீர்கள்?

தங்களின் நடவடிக்கைகளும், பிரசாரங்களும் தங்கள் இயக்கத்தினை மட்டுமே செயற்பட அனுமதிப்பீர்கள் போல் தெரிகிறது. அவ்வாறெனில் இவ் இயக்கம் தவறான வழியில் சென்றால், அல்லது சர்வதேச சதிகாரர்களின் கையில் சிக்கி போராட்டம் சீர்குலைந்தால் 35 லட்சம் மக்களின் எதிர்காலம் என்ன?

கடந்த 35 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ்பேசும் மக்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியை ஆதரித்து வந்தபோதும், விடுதலை இயக்கங்களும் இறுதிக்காலத்தில் செயற்பட்ட காரணத்தால் தான் தமிழர் விடுதலைக் கூட்டணி செயற்படாது பலமிழந்த போது விடுதலை இயக்கங்களால் போராட்டத்தினை தொடர்ந்தும் எடுத்துச் செல்ல முடிந்தது. தங்களது இன்றைய செயற்பாடுகளைப் பார்க்கும்போது தங்கள் இயக்கம் அவ்வாறு துப்பாக்கி முனையில் எடுத்துச் சென்று போராட்டம் இடைநடுவில் பலமிழந்து விட்டால் பின்னர் எடுத்துச்செல்ல இயக்கமின்றி சிங்கள பேரின வாதிகளின் காற்செருப்புக்கு தோலாகவே தமிழ் மக்கள் உபயோகப்படுவார்கள்.

காலம் காலமாக தங்களின் இயக்கம் மேற்கொண்டுவரும் செயற்பாடுகள் குடாநாட்டுக்குள் நடத்தும் போராட்டம் என்ற நிலைக்கே தள்ளியுள்ளன. தங்கள் இயக்க நடவடிக்கைகள் 35 லட்சம் தமிழ்பேசும் மக்களின் விடுதலைப்போராட்டமாக இல்லாமல் ஏதோ யாழ்ப்பாணத்தாரின் போராட்டமாக சிறுமைப்படுத்த முயற்சிக்கிறீர்கள்.

இத்தனைக்கும் மேலாக தங்கள் இயக்கம் இறுதியாக இப்படுகொலைகள் குறித்து வெளியிட்டுள்ள அறிக்கைகளும், நடவடிக்கைகளும் வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்களை அவமரியாதை செய்யும் விதத்திலும், வெளிநாட்டவர்கள் எமது போராட்டத்தினை கேலி செய்யும் விதத்திலும் அமைந்துவருவதை மிகவும் வருத்தத்துடன் தெரிவிக்கிறோம்.

அதேவேளை தங்கள் இயக்க பிரசாரங்கள் துண்டுப்பிரசுரங்கள் மூலமாகவும், வாய் மூலமாகவும் சில பொறுப்புள்ளவர்களால் பொறுப்பற்ற விதத்தில் மேற்கொ

தொடர் →

www.tamilarangam.net


ள்ளப்பட்டுவருகிறது.

'ரெலோ' இயக்கத்திற்கெதிரான படுகொலைகளைச் செய்யும்போது பொதுமக்கள் குளிர்பானம் தந்ததாகவும், நடனமாடியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தகைய கீழ்த்தரமான இரண்டாம் தர பிரசாரங்களின் மூலம், சர்வ தேச ரீதியில் வளர்ச்சியடைந்த ஒரு நாகரீக சமுதாயமெனவும், தலைசிறந்த கலாச்சார பாரம்பரியங்களை கொண்டதெனவும் போற்றப்படும் தமிழ்மக்களை, இக்காலத்தில் மற்றவன் மரணமடைவதைக்கண்டு மகிழ்ச்சியுற்று நடனமாடும் சமுதாயமென தாங்கள் காட்ட விழைவது ஏன்?

தமிழ்மக்கள் தற்போதும் வேடுவர் காலத்தவர் என்பதைக்காட்டவா? அவ்வாறாயின் இவ் இயக்கங்களின் செயற்பாடும் வேடுவ சமுதாயத்திற்குரிய தனிச்சிறப்பான செயற்பாடுகளைத்தான் மேற்கொள்கின்றன என்பதைக்காட்டவா?

வெளிநாடுகளில் வாழ்வோரைப் பார்த்து அதாவது போராட்டம் பற்றி விமர்சித்தால், அல்லது தவறுகளைச் சுட்டிக்காட்டினால், அல்லது கேட்கும் பணத்தை கொடுக்க மறுத்தால் ஈழத்திற்கு வாருங்கள். பார்த்துக்கொள்கிறோமென்ற கீழ்த்தரமான, கேவலமான பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் நோக்கமென்ன? தமிழ் மக்கள் உங்கள் குடும்பச்சொத்தென்றும், தமிழ் ஈழம் இயக்கச்சொத்தென்றும் கருதுகிறீர்களா? எவ்வாறான தேசிய விடுதலைப் போராட்டத்தை நீங்கள் நடத்துகிறீர்கள்?

தேசிய விடுதலை என்பது சமுதாயத்தில் வாழும் சகல மக்களுக்கும் எதிரான ஒடுக்குமுறைக்கெதிரான போராட்டமென நீங்கள் கருதவில்லையா? இன்னொரு இயக்கத்திலிருப்பவன், அல்லது ஆதரிக்காதவன் உங்கள் அர்த்தப்படி எதிரியென கருதுகிறீர்களா? இது மக்களுக்காக மக்களால் நடத்தப்படும் போராட்டமா? அல்லது இயக்கத்திற்காக இயக்கத்தால் நடத்தப்படும் போராட்டமா?

அவ்வாறாயின் இது தேசிய விடுதலைப்போராட்டமாக இருக்கமுடியாது? இது இயக்க குறுகிய நலன் வாதமாகவே இருக்கமுடியும்.

35 லட்சத்திற்கு மேற்பட்ட தமிழ்பேசும் மக்களின் எதிர்காலம் குறித்து நீங்கள் தனித்துச் செயற்படமுடியாது. தீர்மானிக்கவும் முடியாது. இது ஜனநாயகத் தீர்வாகவும் இருக்கமுடியாது.

சமூகத்தின் பல்வேறு மட்டங்களில் வாழும் மக்களின் இணைந்த ஜனநாயக அமைப்பே இதனை தீர்மானிக்க முடியும். போராட்டத்தையும் எடுத்துச்செல்லவும் முடியும்.

எனவே உங்கள் குறுகிய இயக்க அபிலாசைகளைத் தீர்க்க ஆயிரக்கணக்கான போராளிகளை பலியாக்காது பரந்த ஜனநாயக முன்னணியில் இணைந்து செயற்படுமாறு அழைப்புவிடுக்கிறோம்.

இவ் ஜனநாயக முன்னணியில் தங்கள் இயக்கத்தின் பங்கு பிரதானமானது என்பதை அங்கீகரிக்கிறோம். இதன் அர்த்தம் தங்கள் கடந்த கால செயற்பாடுகளை ஏற்றுக்கொண்டுள்ளோம் என்பதல்ல. தங்கள் இயக்கம் கடந்த காலத்தில் மேற்கொண்ட செயற்பாடுகள் குறித்து சரியான விமர்சனத்தை மக்கள் முன் வைக்கவேண்டும். எதிர்காலம் குறித்து தெளிவான திட்டத்தினையும் அறிவிக்கவேண்டும். அதேவேளை தங்களோடு இணைந்து செயற்படும் இதர சக்திகள் தங்களின் ஒற்றுமைக்கான விருப்பத்தின் விசுவாசத்தினை உணரும் வகையில் தங்கள் கருமங்களை எதிர்பார்க்கிறோம்.

'ரெலோ' இயக்கத்தின் போராளிகளையும், அதன் தலைவர்களில் ஒருவரான 'மோகன்' என்பவரையும் தடுத்து வைத்துள்ளீர்கள். இவை தாங்கள் ஜனநாயகத்தில் வைத்துள்ள நம்பிக்கையில் அவநம்பிக்கையைத் தருகின்றன.

இம்மாதிரியான போக்கு தொடர்ந்து நீடிக்குமாயின் இன்னொரு 'லெபனான்' தமிழ் மண்ணில் தோற்றுவது தவிர்க்க முடியாததாகிவிடும். இதை எந்த விடுதலை விரும்பியும் விரும்பப்போவதில்லை.

எனவே அரசியல் பிரச்சனைகளை சூழ்ச்சி வழியில் அணுகும் மனப்போக்கை விட்டு ஜனநாயக ரீதியில் அணுகும்படி வேண்டுகிறோம்.

நாகரீகமற்ற கேவலமான, போராட்டத்தை சிறுமைப்படுத்துகின்ற, இயக்கங்களை [illegible] செய்கின்ற கீழ்த்தரமான பிரசாரங்களை கைவிட்டு உண்மையான பிரச்சனைகளில் கவனத்தை செலுத்தும்படி வேண்டுகிறோம்.

இறுதியாக இப்படுகொலைகள் குறித்து நாம் பலத்த தந்தேகம் கொள்கிறோம். இதற்கான விசாரணை தேவையென்பதை வலியுறுத்த விரும்புகிறோம்.

* பகிரங்க விசாரணைக்கு உடன்படுவீர்களா?

* பரந்த ஜனநாயக முன்னணியை அமைக்க உங்கள் திட்டமென்ன?

* இயக்க தலைவர்களையும், போராளிகளையும் அழிக்கும் நடவடிக்கை தொடருமா?

நன்றி

**THAMIL EELAM**
**LIBERATION ORGANIZATION**